**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 15/2016**

**வாதி தரப்பு சாட்சி–3 அன்புராஜ் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.09.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) சர்வே எண் 712/9 மற்றும் 712/10 ஆகியவற்றிற்கு வாதி சண்முகம் பெயரில் எப்போது பட்டா மாறியிருக்கிறது என்றால், என்னிடம் உள்ள பதிவேடுகளில் மேற்படி குறிப்பு இல்லை, வட்டாட்சியர் அலுவலகத்தில்தான் இருக்கும். எனக்கு வந்த அழைப்பாணையில் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் ஆஜர் செய்ய கோரப்பட்டுள்ளது என்றால், மேற்படி ஆவணங்களை உத்தரவு எதுவும் இல்லாமல் என்வசம் ஒப்படைக்க மாட்டார்கள். வட்டாட்சியரை விசாரணை செய்தால்தான் மேற்படி விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். எங்கள் பதிவேடுகளில் பட்டா எதன் அடிப்படையில் மாற்றப்பட்டது என்ற உத்தரவு பற்றிய குறிப்புகள் சிவப்பு மையினால் எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த பதிவேடு சென்னை அலுவலகத்திற்கு சென்றுவிட்டது, தற்போது உள்ள நகல்களில் அதுபற்றிய குறிப்புகள் இல்லை.

2) 1994 ல் பெரியசாமி பண்டாரம் பெயரில் சர்வே எண் 712/9 மற்றும் 712/10 ற்கு பட்டா இருந்ததா என்றால் சர்வே எண் 712/9 ற்கு பட்டா எண் 728 காளியப்ப பண்டாரம் மகன் பெரியசாமி என்பவர் பெயரிலும், சர்வே எண் 712/10 ற்கு பட்டா எண் 445 சாமியப்ப பிள்ளை மகன் சண்முகம் பெயரிலும் உள்ளது. மேற்படி ஆவணம் எந்த வருடத்திற்கு உரியது என்றால் 2022 வருடத்திற்கு உரியது. 1990 ம் வருடம் பதிவேடுகள் கொண்டு வரவில்லையா என்றால், அது தற்போது எங்கள் வசம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2005 ம் வருடத்தில் சர்வே எண் 712/9 ற்கு பெரியசாமி பண்டாரம் மகள்கள் காளியம்மாள்

மற்றும் தங்கம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், அது சம்பந்தமான ஆவணங்கள் தற்போது எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேற்படி அசல் ஆவணங்கள் அனைத்தும் போலி பட்டா வழங்கப்பட்டது சம்பந்தமாக விசாரணைக்காக சென்னை அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சண்முகம் பெயரில் உள்ள பட்டா உண்மையானதா என்றால், 2024 ம் வருடத்திற்கு பின்னிட்டு அனைத்து ஆவணங்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

3) இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் அது உண்மையானது என கருத இயலாது என்றால், நிலஅளவையர் பிரிவில்தான் மேற்படி ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே அவர்களை விசாரித்தால்தான் தெரியும். என்னிடம் உள்ள ஆவணங்கள் உண்மையானதா, மோசடியாக தயார் செய்யப்பட்டதா என என்னால் சொல்லமுடியாது என்றால், நான் இந்த அலுவலகத்திற்கு வந்த பின்னிட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் சாட்சியம் அளிக்க கொண்டு வந்துள்ள பதிவேடுகள் அனைத்தும் நகல்கள்தான் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் அனைத்தும் சென்னை அலுவலகத்திற்கு சென்றுள்ளது. எப்போது சென்றது என்றால் சுமார் 1 வருடம் இருக்கும். சென்னை அலுவலகத்தில் உள்ள அசல் ஆவணங்கள் வந்தால்தான் உண்மை விபரம் தெரியும் என்றால், நிலஅளவையர் பிரிவில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்பது பற்றி அவர்களை விசாரித்தால்தான் தெரியும்.

4) சா.சா.ஆ.1 மற்றும் 2 ல் அரசு பயன்பாட்டிற்கு மட்டும் என குறிப்பு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற பயன்பாட்டிற்காக மட்டும் அவ்வாறு கொடுத்துள்ளேன். சா.சா.ஆ.1 மற்றும் 2 ல் 04.05.2023 தேதியில்தான் இணையதளத்தின் மூலம் உத்தரவு பிறப்பித்ததாக கண்டுள்ளது என்றால் சரியல்ல, 29.11.2023 ல் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 712/9

பட்டா எண் 728 பெரியசாமி பண்டாரம் பெயரில் இருப்பதாக சிட்டா மற்றும் அடங்கல் பதிவேட்டில் இருந்ததை வைத்துதான் சொன்னேன் என்றால் சரிதான். சர்வே எண் 712/9 பட்டா எண் 728 என்ற இடத்தில் சாமியப்பபிள்ளை மகன் சண்முகம் என பென்சிலால் எழுதப்பட்டதை வைத்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், எனக்கு முன்பு இருந்த அலுவலர் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையில் எழுதியிருப்பார். என்னிடம் உள்ள அடங்கல் பதிவேடு எந்த வருடத்திற்கு உரியது என்றால் 1993 – 1994 வருடத்திற்கு உரியது. மேற்படி அ பதிவேட்டில் சர்வே எண் 712/9 காளியப்பன் மகன் பெரியசாமி பண்டாரம் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 712/10 பி.நாகப்பபிள்ளை பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

5) மேற்படி பதிவேடு 1993 – 1994 ற்கு உரியது. அதில் தற்போதைய பதிவேற்றம் எதுவும் செய்யப்படவில்லை. எதனால் 1993 – 1994 அடங்கல் பதிவேட்டில் தற்போதைய பதிவேற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்றால், மேற்படி பதிவேட்டில் புதிய பதிவுகள் எதுவும் செய்யமாட்டோம், பழைய பதிவுகள் பற்றி தெரிந்து கொள்வதற்காக இந்த பதிவேட்டை அப்படியே பராமரித்து வருவோம். நான் கொண்டு வந்த அனைத்து பிதிவேடுகளும் நிலஅளவைத் துறையில் இருந்து பெற்று வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சாட்சிய அழைப்பாணையில் கேட்டுள்ள விபரங்களை வட்டாட்சியருக்கு கடிதம் வைத்து ஆவணங்களை கேட்டேனா என்றால், கேட்டேன். ஆவணங்கள் சென்னை சென்றுவிட்டதாக சொன்னார்கள். தற்போது உள்ள ஆவணங்களை என்வசம் தரமாட்டார்கள். வட்டாட்சியர் வந்துதான் சாட்சியம் அளிப்பார். வட்டாட்சியர் ஆவணங்கள் சென்னை சென்றுவிட்டதாக எழுத்து மூலமாக கடிதம் கொடுத்தாரா என்றால் இல்லை, வாய்மொழியாக சொன்னார்.

6) நான் வைத்திருக்கும் சிட்டா பதிவேட்டில் சிவப்பு மையினால் அங்கங்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது நிலஅளவையர் பிரிவில் செய்யப்பட்டுள்ளது. புல வரைபட பதிவேடு தற்போது நான் வைத்துள்ளது

நகல்தான் என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள பதிவேடுகள் நிலஅளவையர் துறையை சேர்ந்தது என்பதற்கான குறிப்புகள் எதுவும் அந்த பதிவேடுகளில் இல்லை என்றால் சரிதான். நிலஅளவையர் துறை என்பது வட்டாட்சியருக்கு கீழ் செயல்படும் ஒரு பிரிவு என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் சென்னை சென்றிருப்பதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கணினி பட்டாவில் சில பெயர்கள் தவறாக ஏற்றப்பட்டிருக்கலாம் என்றால், அது சம்பந்தமாக விசாரணை செய்யத்தான் சென்னை அலுவலகத்திற்கு பதிவேடுகள் அனுப்பப்பட்டுள்ளது. அசல் ஆவங்கள் வந்தால்தான் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**